குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.

அ.சா. 4 சி.சி. எண்.99/2011

2023–ம் ஆண்டு மே 18–ம் வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 4–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சிவக்குமார் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லட்சுமி | ஜாதி | |
| கணவர் பெயர் | பாண்டுரங்கன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

A1 (Ravichandran),A2(Pachiyannan) A4(Jayachithra) Present. A3(Cinnaponnu) Absent. Petition U/s. 317 CrPC filed and allowed. Defence counsel Mr.K.Sivakumar Present for Advocate Mr. M.P.Krishnan. APP Mr. M.Suresh present)

முதல் விசாரணை.

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2018–ம் ஆண்டு ஜீலை மாதம் ஓய்வு பெற்று தற்போது சேலத்தில் குடியிருந்து வருகிறேன். கடந்த 02.08.2011–ம் தேதி காவல் உதவி ஆய்வாளராக ஓமலூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது காலை 8.30 மணியளவில் ஒமலூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஓமலூர் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர். ராஜன் என்பவர் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சாட்சி மைலாம்பால் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பதிவு செய்து வந்து என்னிடம் ஆஜர் செய்ததை பெற்று மேலும் சி.எஸ்.ஆர். 116/2011 கோப்பினை பரிசீலனை செய்து நிலைய குற்ற எண். 08/2011 சட்டபிரிவுகள் 498(A), 324 படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினமே காலை 10.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தில் சாட்சிகள் வேணி மற்றும் பெரியகண்ணு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வை மகஜர்ி மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகும்).** பின்பு சாட்சிகள் மைலாம்பாள், செல்லம்மாள், பாப்பாத்தி

வைகுந்தம், வேணி, பெரியகண்ணு ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3. பின்பு எதிரி ரவிச்சந்திரனை தேடி வந்த நிலையில் ஓமலூர் பஸ் நிலையத்தில் வைத்து வாதி அடையாளம் காட்ட அன்றைய தினமே பகல் 11.00 மணியளவில் எதிரி ரவிசந்திரனை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்பு சம்பவத்தில் காயமடைந்த சாட்சிக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் திரு.ரமேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றேன். பின்பு வழக்கின் புலன் விசாரணை முடித்து சம்பவம் உண்மையென தெரியவந்ததால் எதிரியின் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u> இல்லை

சாட்சி. லட்சுமி

ஒம்/–S.சர்மிளா
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
ஓமலூர்.